(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, மின்சார அமைச்சர் பதில் சொல்லும்போது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். அந்த ஆணை அடிப்படையிலே அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகை என்ன என்று அமைச்சர் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் அன்று ரூபாய் 150 என்ற அடிப்படை சம்பள விகிதம் பொருத்தப்பட்டு அதற்கு மேலான ஆண்டுகள் கணக்கிடப்பட்டு கூடுதலான ஊதியம் வழங்கப்படும். இதுதான் அந்த ஆணையின் சாராம்சம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, மின் வாரியத்தின்கீழ் படித்து பட்டம் பெற்றிருக்கக்கூடிய பலர் காஷுவல் லேபர் மாதிரி இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டிருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அவர் பிறப்பித்த உத்தரவின்படி அப்படிப்பட்ட காஷுவல் லேபர் முறையிலே, ரூ. $2\frac{3}{4}$, ரூ. $3\frac{1}{4}$ என்று கூலி கொடுத்து வேலை வாங்குவது அடியோடு தடுக்கப்பட்டு, அவர்கள் எல்லோரும் பதிவு செய்யப்பட்டு வேலையிலே அமர்த்தப்படுவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எனக்குத் தகவல் இல்லை, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அரசு அதைப்பற்றி ஆராயும்.

பணகுடி துணை மின் நிலையம்.

*வினா எண் 220—திரு யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடியிலுள்ள 66 K.V திறனுள்ள துணை மின் நிலையத்தை 133 K.V திறனுடையதாக மாற்றி அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது முதல் செயல்படும்?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன்: (அ) பணகுடியிலுள்ள துணை மின் நிலையத்தை 66 கிலோ வாட்டிலிருந்து 110 கிலோ வாட் திறனுள்ளதாக மாற்றி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1979 மார்ச் 5] [திரு. ச. இராமச்சந்திரன்]

(ஆ) இத்திட்டம் 1979-80 ஆண்டிற்குள் முடிந்து, செயல் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காயாமொழி கூட்டுறவு நாணய விவசாய சங்கம்.

*வினா எண் 221—திரு இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், காயாமொழி கூட்டுறவு நாணய விவசாயக் கடன் சங்கம் 464-ல், 1967 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு முடிய இருந்த தலைவர் மீது ஏதாவது ஊழல் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட நபர்கள் மீது குற்றவியல் (கிரிமினல்) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடை பெற்று வருகிறது.

திரு இரா. அமிர்தராஜ்: தலைவர் அவர்களே, இந்த காயா மொழி கூட்டுறவு நாணய வவசாயக் கடன் சங்கத்தில் 1967 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு காலத்தில் தலைவர் ஆக இருந்தது யார்? எவ்வளவு தொகை ஊழல் நடந்தது என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, காயாமொழி கூட்டுறவு நாணய விவசாயக் கடன் சங்கத்தின் தலைவர் ஆக இருந்தது திரு ஆர். கே. கேசவ ஆதித்தன் என்பவர். மிக அதிக இருப்புத் தொகையை தன் கையில் வைத்துக் கொண்டிருந்தார் என்று திருநெலவேலி மத்திய கூட்டுறவு வங்கியின் சரக மேற்பார்வையாளர் தந்த அறிக்கையின் அடிப்படையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் இக்கூட்டுறவு நாணய விவசாயக் கடன் சங்கத்தின் மூலம் 99,346.22 ரூபாய் வரை கையாடல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இது சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டு இன்றைக்கு அது வழக்கு மன்றத்திலே இருக்கிறது.